*தஞ்சாவூர், செயற்பொறியாளர் (வே.பொ) (பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்*
*பிறப்பிப்பவர்: திரு. H.N.கான், எம்.டெக்., எம்.பி.ஏ*

செ.மு.ஆ.எண்: ஆ/727/2019(5) நாள்: 7 .11.2019

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி.ப.மகேஸ்வரி, இளநிலை உதவியாளர் (பி.அ) - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்தது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பு.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1012/PSD-G2/2019, நாள்: 20.02.2019 மற்றும் 27.02.2019
2. வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண் கூடுதல் இயக்குநர் (ப.மே) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி5/139388/2019, நாள்: 05.03.2019.
3. தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அப2/8448/2019, நாள்: 08.03.2019.
4. செயற்பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ/727/2019, நாள்: 14.03.2019
5. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். அநிபி3/23567/2019, நாள்: 20.07.2019
6. உதவி செயற்பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களின் கடித எண். ஆ/1103/2019, நாள்: 18.10.2019

------

**ஆணைகள்:**

பார்வை (1)-ல் காணும் செயல்முறை ஆணையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டு முடிய நேரடித் தேர்வின் மூலம் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, பணி நியமன ஆணை வழங்கி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ப.மகேஸ்வரி, இளநிலை உதவியாளர் (பி.அ) அவர்கள் பார்வை (4)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் 18.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (5)-ல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, தஞ்சாவூர் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ப.மகேஸ்வரி அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 18.03.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் இவர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

7/11/19
செயற்பொறியாளர் (வே.பொ)(பொ),
தஞ்சாவூர்.

5/11/19

பெறுநர்

திருமதி.ப.மகேஸ்வரி ,
இளநிலை உதவியாளர்.
----- உரிய வழியாக.

**நகல்:-** உதவி செயற்பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர்.

**நகல்:** வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:-** தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:-** கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:-** வேளாண்மை இணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு அன்புடன் அனுப்பப்படுகிறது.

**நகல்:-** இருப்புக் கோப்பு

**நகல்:-** பணிப்பதிவேடு